இந்துசாதனம்.

பத்திரக் கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ 5-00
இலங்கை, இந்தியா: „ ரூ. 8.00
தொலைவாய்ப்பகுதி: „ ரூ 9.00
தனிப்பிரதி: சதம் 5
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு:—ஒருகலம் ரூ. 9-00
„ அரைக்கலம் ரூ. 4-50
„ கால்கலம் ரூ. 3-00
அடுத்த முறைகட்கு அடி விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—௪௦. யாழ்ப்பாணம்:—விபவஸு ஆடிமீ உ௫வ, (1928 ஆகஸ்ட் 9) வியாழக்கிழமை. இலக்கம்—௬௨.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
 சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
 பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
 பிறைபூத்த சடைமவுலிப் பிரானளித்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
 மதம்பூத்தவிநாயகன்றன்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரகரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜனநலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரூ, சாலாமூஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனல் நீர்ழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால் ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினல் முன்மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகப்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்ற்,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

இலங்கை
ஆயுள்வேத வைத்தியகல்லூரி
யாழ்ப்பாணம்.

மேற்படி கல்லூரியிற் சேர்ந்து ஆயுள்வேத வைத்தியத்தையும் ஒருங்கே கற்க விரும்புவோரும் ஆயுள்வேத சித்த வைத்தியத்தைமட்டும் (கொறஸ்போண்டன்கோஸ்) விகிதகற்பனை மூலமாகக் கற்று டிப்பிளோமா என்னும் அரங்கேற்றப் பத்திரம் பெற விரும்புவோரும் தங்களது மனுப்பத்திரங்களை மேற்படி கல்லூரித் தலைவருக்கு அனுப்பி அக்கற்பனைக்குரிய விஷயங்களைத் தெரிந்துகொள்க. அநுபவசித்தியுள்ள நாசர்மார்களுக்கும் சுதேச வைத்தியர்க்கும் கற்பனையின் கால அளவு அவர்க்குரிய அநுபவசித்திக்குத் தக்கதாய்க் குறைக்கப்படும்.

இலங்கா ஆயுள்வேத வைத்திய கல்லூரித்
தலைவர்.
(Q. 106.)

சக்தி வீரிய விருத்தி லேகியம்.

(1) தற்காலத்தில் அநேகவிதமான வீரியவிருத்தி அவுடதங்கள் வெளிவந்திருப்பினும் அவற்றுள் எங்கள் சக்தி வீரியவிருத்தி லேகியமே விசேஷகுணத்தைக் கொடுக்கும்.

(2) இந்த லேகியத்தின் குணமானது உஷ்ணம் முதலிய மேகரோகங்கள் ஜீவரத்னபீடமாகிய தேகத்தைத் தாக்குவதால் உண்டாகும் எலும்புருக்கி ரோகங்களையும் நரிதஸ்கபிதமென்னும் ஓர்வித நோயினல் நேரிட்ட இடுப்புவலியும் மலேரியாக் காய்ச்சலினல் (Malarial fever) சரீரம் மெலிந்து சாப்பாட்டில் பிரியமில்லாமல் தேக வெளுப்பு, பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், மலச்சிக்கு, பித்தக்கிறுதி, பித்தவாய்வு, இருதயத்துடிப்பு, நரம்புத்தளர்ச்சி, கைகால் அசதி, விரைவாதம், ஆண்தன்மை நாளுக்குநாள் குறைதல் முதலிய துர்க்குறிகளையும் நீக்கி மனோற்சாகம், ஞாபகசக்தி, வீரியவிருத்தி, தேகபலம், சரீராரோக்கியம், முதலியன உண்டாக்குவதில் மேன்மைவாய்ந்து, ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல பெலவீனத்திற்கும் இதற்கிணை மருந்து கிடையாது.

(3) எங்கள் சக்தி வீரிய விருத்தி லேகியத்தை 40 நாள் முறைப்படி உட்கொண்டால் தேகத்தில் ஏற்பட்ட உஷ்ணத்தை சமன்படுத்தி இரத்தத்தைச் சகல நரம்புகளிலும் ஓடச்செய்து சப்ததாதுகளுக்கும் வலுவை ஏற்படுத்தி அதிக வயதினலும் பலஈனத்தினலும் நரம்பு சுருங்குவதால் ஏற்பட்ட சகலவித சோர்வையும் புறக்கணித்து மனரம்மியமான இன்பரசவாழ்வைத் தரத்தக்கதோர் சித்தானந்த "மகா சஞ்சீவினி" என்றல்லவோ சொல்லலாம்! இச்சாபத்தியம்!!

1 ரூத்தல் மருந்து ரூபா 10 00
½ „ „ „ 5 00
¼ „ „ „ 3 50
வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.

தந்திவிலாசம்:— "Chambavee" Karainagar.

இங்ஙனம்,
பிஷக்வரர், டக்டர் எம் என். பிள்ளை ஏ. எம். ஏ. சீ.
சிவ சாம்பவி ஔடதாலயம்,
காரைநகர், யாழ்ப்பாணம்.

குறிப்பு:—எங்கள் லேகியத்தில் ஓர்விதமான மிருகசத்துக்களும் லாகிரிவஸ்துக்களும் சேர்க்கப்படவில்லை. இவை தாவரவஸ்துக்களைக்கொண்டே தயாரிக்கப்பட்டது மேலும் எங்களிடம் அநேகவிதமான ரோகங்களுக்கு மருந்துகள் தயார்செய்யப்பட்டிருக்கின்றன மருந்து வேண்டியவர்கள் வியாதியின் குணங்கள், வயது, உத்தியோகம், புருஷர் அல்லது ஸ்திரீ என்பதையும், கலியாண மானவரா இல்லையா; வியாதி ஆரம்பித்தகாலம், முன் வேறு எவ்வித வியாதிகள் ஏற்பட்டதென்றும் விபரமாக எழுதினல் எங்களால் தீர்க்க முடியுமானல் அதற்குத்தகுந்த மருந்துகளை V. P. P. மூலமாய் அனுப்புவோம்; அல்லது நிராதரோகமா யிருந்தபக்ஷத்தில் பதில் எழுதிவிடுவோம்

பதில் வேண்டுவோர்கள் 2 Ans. 6 Pies முத்திரையும் சிங்கப்பூர்மலாய்நாடு முதலியதொடுவாய்நாச்சியப் பகுதிகளிலிருந்து 20 cts முத்திரையும் அனுப்பினல் விபரமாகப் பதிலெழுதப்படும்

(Q 104)

கௌரவ ஸேர் பொன்
இராமநாதனவர்கள்
இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரைநடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா2 அணு 8.
2. பகவற்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
சுன்னகம், யாழ்ப்பாணம்.

(H 61)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் வணிகராகவிருந்து தற்காலம் வணிகமற்றிருக்கும் ராம வீ அ சி நாராயணன் செட்டியார் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1926-ம் ஆ அக்டோபர் மீ

இல.	உ.	ரு	வைத்தவர் பெயர் நகைவிபரம்.
527	9	23	சுழிபுரம் முத்துக்குமாரு காசிப்பிள்ளை பொன் காப்பு சோடி 1 கொண்டைப்பூ 1
546	20	30	கோப்பாய முத்துவேலு சிவரெத்தினம் பொன் கொலுசுகாப்பு சோடி 1
555	23	15	சேணியதெரு நாகலிங்கம் பொன்னுத்துரை பொன் சைச்சங்கிலி 1
570	27	50	காரைதீவு சண்முகஐயர் சுந்தரஐயர் பொன் சங்கிலிப்பட்டியல் 1
நவம்பர் மீ			
595	15	30	சிவலிங்கப்புளியடி சுப்பிரமணியம் தாமோதரம்பிள்ளை பொன் ருத்திராக்ஷத்துடன் சிறு கண்டசரம் 1
1927-ம் ஆ ஜெனவரி மீ			
668	10	30	சிவியாதெரு சிற்றம்பலம் சரவணமுத்து பொடியம்பி பதம் பூரிச்சக்குத்தி அட்டியல் 1
673	16	30	காரைதீவு முருகேசு வல்லிபுரம் பொன் சிறு கம்பிப்பூரான் அட்டியல் 1
மார்ச்சு மீ			
725	16	40	மானிப்பாய் சுவாமிநாதபிள்ளை இராசநாயகம் பொன் உருத்திராக்ஷப் பேழை 1
ஏப்பிரல் மீ			
746	6	180	குசவன்குளத்தடி வேலுப்பிள்ளை சோமசுந்தரம் பொன் வெட்டிக் கொலுசுக்காப்பு சோடி 1, பூரிச்சக்குத்தி அட்டியல் 1
765	20	60	காரைதீவு சுப்பர் கந்தையா பொ. முகப்புடன் வைரவுத்த கம்பிப்பூரான் அட்டியல் 1
ஜூன் மீ			
820	22	20	கச்சேரியடி சுப்பிரமணியர் தம்பிப்பிள்ளை பொன் கைச்சங்கிலி 1
ஜூலை மீ			
843	18	40	திருநெல்வேலி முத்துக்குமாரு சுப்பையா பொன் கம்பிப்பூரான் அட்டியல் 1
852	30	35	கோவியடி குமாரசாமிக்குருக்கள் செல்லத்துரைக்குருக்கள் பொன் செவுட்டுடன் இரண்டுபட்டு சரடு 1

விற்பனவு:—1928-ம் ஆண்டு ஆகஸ்ட்மீ 25-ந் திகதிக்குச் சரியான விபவஸு ஆவணிமீ 10உ சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்பட்ட நகைகள் பிறநாளைவரை மேற்படி மேற்படி அடைத் திணைக்களவிலை பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி ஐயம்பிள்ளை உடையார்,
லைசென்ஸ்மென்தர்,
வண்ணார்பண்ணை.

(Mis. 1266)

சுகம் சுறுக்காயும் நிச்சயமாயுங் கிடைக்கும்.
எவ்வித நோவாயிருந்தாலுஞ்சரி,
தலைவலி
நரம்புவலி
இல்வாய்வு
இடைப்பிடிப்பு
வாதம்
சுளுக்கு
தொண்டை நோ
நெஞ்சுச்சளி
எல்லாவற்றிற்கும்

லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்.

உடன் சுகந்தரும்



43 வருடகாலமாய் அனுபோகத்தில் சிறந்த மருந்து என்று நிச்சயிக்கப்பட்டது. அது தரும் சுகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதின் விலை ஒரு பெரிதல்ல.

மிருகக்கொழுப்புச் சேராதது

எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்.

Little's Oriental Balm and Pharmaceuticals Ltd., Madras.

(2—28.

(Y. 51.)

வேலணை, சரஸ்வதி வித்தியாலயத் தமிழ் உயர்தரவகுப்புக்கள்.

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலைப் பிரவேச பரீக்ஷைக்கும், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கப் பிரவேச பரீக்ஷைக்கும் தோற்றுவார்க்கு வாய்ப்புடைத்தாகவோர் பிரவேச வகுப்பும், பாலபண்டித பரீக்ஷைக்குத் தோற்றுவார்க்கு வேண்டுவதாகவோர் பாலபண்டித வகுப்பும் எமது வித்தியாலயத்தில் அமைத்து நடாத்தப்படும்.

பிரவேச வகுப்பினர்க்குக் கிழமைதோறும் மூன்றுநாளும், பாலபண்டித வகுப்பினர்க்குச் சனிக்கிழமைதோறும் கல்வி கற்பிக்கப்படும்.

கற்பிக்கும் ஆசிரியர்:—
வித்வான் ஸ்ரீமத் சுப்பையபிள்ளை
தமிழாசிரியர் ,, ம. தம்பு
,, இ. மருதையனார்

இவ்வகுப்புகளிற் சேர்ந்து கற்க விரும்புவார் 1928-ம் ஞூ ஆகஸ்டு மீ 20உக்கு முன் தமது விண்ணப்பப் பத்திரத்தை மேற்குறித்த வித்தியாலயத் தலைமையாசிரியர்க்கு அனுப்பக்கடவர்.

வித்தியாரம்ப நாள் பின்னர் அறிவிக்கப்படும். இன்னும் விபரமறிய வேண்டுவோர் மேற்காட்டினோர்க் கெழுதி அறிந்து கொள்க. பிறவூர்ப் பிள்ளைகட்கு விடுதியமைத்துக் கொடுக்கப்படும்.

விலாசம்:
தலைமையாசிரியர்
'சரஸ்வதி'
வேலணை.

இங்ஙனம்,
வை. விஜயரத்தினம்.
1—8—1928.

குறிப்பு:—மூன்றுமாதவேதனம் சேரும்பொழுது கொடுபடல் வேண்டும். வேதன அளவு மாணவர் தொகை யறிந்தபின்னரே நிச்சயிக்கப்படும்.

(Mis. 1269)

தவறிவிட்டன.

நன்றாகச் சுருட்டிக் கட்டப்பட்ட பாய், அதற்குள் ஒரு பித்தளைச் செம்பு, ஒரு சேலை, பனங்கட்டி, விபூதி என்னும் இவைகள் யானையிறவுக்கும் சாவகச்சேரிக்கு மிடையில் தவறி விழுந்துபோய்விட்டன. இவைகள் கதிர்காம யாத்திரையால் மீண்ட ஒருவருக்குரிய அடைக்கலச் சொத்தாகும். அகப்பட்டால் இதைக் கொண்டுவந்து தருபவர்களுக்கு அல்லது தெரிவிப்பவர்களுக்குத் தக்க சன்மானஞ் செய்யப்படும்.

ச. அ.
(Mis. 1273) C/o இந்துசாதனம்.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஞு ஆடிமீ உ௰உ வியாழக்கிழமை.

சம்மதஞ் சொல்லுதல்.

◆

சட்டநிரூபணசபைப் பிரதிநிதிகளைத் தேர்வு செய்தற்குச் சம்மதஞ் சொல்லும் விஷயத்தில், ஏதும் ஆதனம் பொருள் என்னுமிவைகளுள்ள எவர்களும் கல்வியறிவிற் சிறிதேனுமுள்ளவருமே சம்மதஞ் சொல்லலாகுமென்றகொள்கை இதுகாறும் அநுசரிக்கப்பட்டுவந்தது. ஆனால் இலங்கைக்கு நவீனமாகவந்த அரசியல் விஷயங்களை ஆராய்ந்த மீண்ட விசாரணைச் சங்கத்தார் பொருளாதாரம் கல்வியறிவு என்னுமிவைகளை பொருட்படுத்தாது 21 வயசிற்கு மேற்பட்ட ஆடவன் எவனும் 30 வயசிற்கு மேற்பட்ட பெண் எவளும் சம்மதஞ் சொல்லுதற்கு அருகராவாரென்று அறிக்கை செய்துள்ளனர். அரசியற்றிருத்த விஷயமாகக் குறித்தசங்கத்தார் செய்த அறிக்கைகளுட் பிரதானமாகச் சனங்களால் வெறுக்கப்படுவதும் இந்தச் சங்கத்தார் இலங்கைவாசிகளின் நிலைமையை உள்ளபடி யறிந்தவரல்லர் என்பதை எடுத்துக் காட்டுவதும் சனச்சம்மதஞ் சொல்லும் விஷயத்தைப்பற்றியதாகிய இந்த அறிக்கையேயாகும். தாங்கள் என்னவிஷயத்தை யிட்டுச் சம்மதஞ் சொல்லுகின்றார்கள் என்பதைப்பற்றி எள்ளளவு மறியாதவர்களைக் கொண்டு அந்த விஷயத்திற்குச் சம்மதஞ் சொல்லுவித்தல் போன்ற மதியீனம் பிறிதொன்று மில்லையாம். ஆனாற் சம்மதம் பெற விரும்புவோர் காலகதியில் இவர்களைப் படிப்பித்தலுங் கூடும். அங்ஙனஞ் செய்வராயின் இதில் ஏதும் நன்மையுண்டெனச் சொல்லலாகும். பெண்கள் சம்மதஞ் சொல்லும் விஷயத்தையிட்டு ஆராயின் இதனை இங்குள்ள ஆடவர் விரும்பாததோடு அமையாது பெண்களுள்ளவர்களும் விரும்பவில்லை யென்பது அவர்களுட் பலர் வெளியிடுங் கூற்றால் இனிது விளங்கக் கிடக்கின்றது. இலங்கையிலேயுள்ள பெண்கள் தங்களுக்குச் சம்மதஞ் சொல்லும் அதிகாரத்தை எக்காலத்தாயினும் விரும்பினாரல்லர். குறித்த விசாரணைச் சங்கத்தார் கொழும்பிற்கு வந்தபொழுது அங்குள்ள சிலரினுஞ் சிலராகிய தன்னிஷ்டமான ஆண்டன்மை பெரிதுங் கொண்ட பெண்ஜனங்கள் ஒருங்குகூடி, தங்களுக்குஞ் சம்மதஞ் சொல்லும் அதிகாரம் வேண்டுமென்று விசாரணைச் சங்கத்தார்களைக் கேட்க, கீழைத் தேசத்தின் இயல்பைச் சிறிதுமறியாது எல்லாத் தேசத்தையும் ஒருவகையாகவே நினைக்கும் இயல்புபூண்ட அவர்கள் 30 வயசிற்கு மேற்பட்ட பெண்களெல்லாரும் சம்மதஞ் சொல்லலாமென்று அறிக்கையிட்டனர். மேலைத்தேசத்துப் பெண்களுக்கும் இங்குள்ள பெண்களுக்கும் இருவரும் பெண்பாலார் என்ற ஒருவிஷயத்தில்மாத்திரம் ஒற்றுமையுண்டன்றி ஏனையவைகள் முழுவதும் வேற்றுமையுடையனவேயாம். மேலைத்தேசத்திலே ஆடவர்கள் எவ்வளவு சுவாதீனத்துடனிருக்கிறார்களோ அவ்வளவு சுவாதீனத்துடன் பெண்களுமிருக்கின்றார்கள். அவர்கள் மணஞ்செய்வதும் பிறவும் தாங்கள் விரும்பிய பிரகாரமேயாம். மேலும் அங்குள்ள பெண்கள் தம்மிஷ்டத்திற்கு ஆடவர்களைப்போல் உத்தியோகமும் மற்றை முயற்சிகளும் பார்த்து வேதனம் பெறுபவர்கள். அவர்களுள் அநேகர் விவாகஞ் செய்யாது நித்தியகன்னிகைகளாயிருப்பவராவர். இன்னும் பலர் கலியாணந் தள்ளப்பெற்றவராயிருப்பர். அங்கே கைம்மைகளைக் காண்டலரிது. இக்காலத்தில் அவர்கள் ஆடவர்களைப்போலவே தங்கள் மயிரையுங் கத்தரித்து உடையிலும் அவர்களைப் பின்பற்றத் தொடங்கிவிட்டனர். அன்றியும் மேலைத்தேசத்திலே ஆடவர்களைக் காட்டிலும் பெண்கள் சனத்தொகையிலும் கூடியிருக்கின்றார்கள்.

இனி, நமது நாட்டுப் பெண்களுடைய நிலைமையை நோக்குமிடத்து இவர்களுள் 30 வயசுடையவர்களும் அதற்குமேற்பட்டவர்களும் விவாகஞ் செய்தவர்களாயும் தம் நாயகனுடைய கட்டுப்பாட்டுக் கமைந்தவர்களாயும் தமக்கெனப் பிரத்தியேகமான ஒரு சம்மதம் இல்லாதவர்களாயும் நாயகன் சம்மதமே தமக்குஞ்சம்மதமெனக்கொண்டவர்களாயும், தாம் ஏதும் பொருளீட்டுதேனும் தம்நாயகனுடைய முழுச் சம்மதத்தொடு ஈட்டுபவர்களாயும் யதேச்சையாகச் சஞ்சாரஞ் செய்யாதவர்களாயும் கீழ்ப்படிவுள்ளவர்களாயும் அரசியல் விவகார விஷயங்களில் இராமர் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன கூடவந்த குரங்குகள் ஆண்டாலென்ன என்னுங் கொள்கையுடையவராகவு மிருக்கின்றனர். ஒழிந்த பெண்கள் விதவைகளாயிருத்தலுங் கூடுமேயன்றி விவாகஞ் செய்யும் நியதியில்லாத பெண்கள் நமது நாட்டில் அரிதினுமரிது. இப்படிப்பட்ட பெண்களுக்குச் சம்மதஞ் சொல்லுஞ் சுவாதீனங் கொடுத்தல் ஒரு ஆடவனுக்கு இருமுறை சம்மதஞ் சொல்லுஞ் சுவாதீனங் கொடுத்தலாகவே முடியுமன்றி வேறு எவ்வகையான நன்மையு மில்லையாம். தங்களும் சம்மதஞ் சொல்லுதற்கு அருகராய்வாரென விரும்பிய கொழும்பிற் சிலபெண்கள்போன்ற பெண்களே சிற்சிலசமையத்தில் இங்கும் தம் கணவன்கருத்துக்கு மாறுகச் சம்மதஞ் சொல்லப் புறப்பட்டுச் செல்ல முடியும்.

இனி, இந்த நவீன விசாரணைச் சங்கத்தார் இங்கிலாந்திலுள்ள தங்கள் பெண்கள் சம்மதஞ் சொல்லும் அதிகாரத்தை எப்பொழுது பெற்றனரென்பதையும் எவ்வாறு பெற்றனரென்பதையுஞ் சிறிதுஞ் சிந்தித்திலர்போலும். இற்றைக்குஇருபது இருபத்தைந்து வருடங்கட்குமுன் இங்கிலாந்திலேயுள்ள கிழவிகள் கலியாணந் தள்ளப்பட்ட பெண்கள் விதவைகளென்றிருப்போர் ஆகிய எல்லாருமொருங்கு சேர்ந்து ஆடவர்களைப்போலத் தங்களுக்கும் சம்மதஞ் சொல்லும் முதலிய சுதந்திரங்கள் வேண்டுமென்று அரசினரை நெருக்கத் தொடங்கினர். இச் சுதந்திர பெண்கள் தங்களுக்குத் துணையாகச் சில பிரபுக்களின் மனைவியரையுஞ் சிநேகஞ் செய்துகொண்டார்கள். இவர்கள் தாங்கள் அரசினருக்குச் சுதந்திரம் வேண்டுமென்று பலமுறை மனுப்பண்ணியும் இடங்கள் தோறுஞ் சென்று பிரசங்கங்களைசெய்தும் இவற்றையெல்லாம் அரசினர் பொருட்படுத்தவில்லையெனக் கண்டபின் இச் சுதந்திரத்தைப் பலாத்காரமாகப் பெறத் தொடங்கினர். அப்பெண்கள் கூட்டங்கூட்டமாகக் கூடிக் கல்லெறிந்தும் பாராளுமன்றக் கட்டடத்திற்குக் கல்லாலெறிந்தும் அதன் கதவுகளையும் யன்னல்களையும் தாமே நேரிற் சென்று தாக்கிச் சிதைத்தும், விசாரணை செய்து சிறை விதிக்கப்பட்ட காலத்திற் சிறையிருந்தும் இங்ஙனம் பலாற்காரமாகப் பெறத் தொடங்கினர். இதற்கிடையில் 1914-ம் ஆண்டிற் பெரியயுத்தமும் ஆரம்பித்தது. அக்காலத்தில் ஆங்கில ராசதந்திரிகள் இந்தப் பெண்களை இக் கலகமான நிலையில் விடுத்து, யுத்த விவகாரங்களிற் பிரவேசித்தல் முடியாதெனக் கண்டு சுதந்திரம் தரலாகுமெனச் சொல்லி யுத்த முடிவில் அதாவது 1919-ம் ஆண்டிலே இவர்களுக்கு இச்சுதந்திரத்தை உதவினர். இப்படி இச்சுதந்திரத்தைப் பெற்று இன்னும் 10 வருடங்களாகவில்லை. இவ்வாறாகத் தங்கள் நாட்டுப் பெண்களுக்கு மிக்க வெறுப்போடு பலாத்காரத்திற்குப் பயந்து பெண்களுக்குப் பயந்து உதவிய சுதந்திரத்தை இந்தச் சங்கத்தார் இங்குள்ள பெண்கள் விரும்பாமலிருக்கத் தாமாக உதவ நோக்கங்கொண்ட காரணம் இங்குள்ள ஆடவர்களுக்கும் பெண்களுக்குமிடையில் மனஸ்தாபத்தை உண்டாக்கி இம் மகளிரையும் தம்நாட்டு மகளிர்களைப்போலாக்கிவிடவா? இந்த விஷயத்தில் இலங்கைவாசிகளெல்லாரும் ஐக்கியப்பட்டு இந்தப் பிரேரணையை நீக்கி விட முயலுதல் வேண்டும்.

உலகம் பலவிதம்.

(முற்றொடர்)

இங்ஙனஞ் சிலகாலம் நான் வீட்டிலிருந்தே கல்விபயின்றபின் என் தகப்பனார் என்னைப்பள்ளிக்கூடத்திற் கொண்டுபோய்ச் சேர்க்க உத்தேசங்கொண்டார். ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை எமது தகப்பனார் என்னைக் கூப்பிட்டுத் 'தம்பி, நாளைக்கு நீ பள்ளிக்கூடத்திற்குப்போக வேண்டும்; நாளைக்கு நல்ல நாள்' என்றார். கேட்டவுடனே திடுக்கிட்டேன்; இவ்வளவு சீக்கிரத்திற் பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டிவருமென்று நான் எள்ளளவும் காத்திருக்கவில்லை. தகப்பனார் இப்படிச்சொல்ல அதனை என்பக்கத்திற் கேட்டுக்கொண்டு நின்ற தாயாரின் முகத்தை வளர்த்த நாய்பார்ப்பதுபோற் பார்த்தேன்; என் அன்னையும் அதற்கு மாறு சொல்லவில்லை. இத்தப்பொல்லாத கருமத்திற்கு என் தாயும் உடன்பாடுதானென்று எண்ணித் தாயின்மீது சிறிது சினங்கொண்டேன்; நான் சினந்து என்ன செய்யக்கூடும். செல்லாவிடத்திற் சினங் குற்றமல்லவா. அன்று தகப்பனார் சொன்ன வார்த்தையைக் கேட்டநேரந் தொடக்கம் எனக்கு மனசிலே ஏக்கமுண்டாய் விட்டது; பசிபறந்துபோய் விட்டது. பெருங்கவலையோடு பொழுதுபட்டபின், ஒன்றும் உண்ணாது படுக்கைக்குப் போனேன்; படுத்தேனேயாயினும் நித்திரைவரவில்லை; என் கால் கைகளெல்லாஞ் சோர்ந்தன; தலையிடிப்பது போலிருந்தது; பின்னர்ச் சரீரம் சற்றுநேரம் குளிர்ந்தது; போர்த்துக்கொண்டு ஒருவாறு நடுச்சாமத்தின் மேல் உறங்கி விட்டேன்.

* * *

விடிய நான் நித்திரையினின்றும் விழித்தபோது உண்மையான காய்ச்சல் காய்ந்தது. இதற்கிடையில் என்தாயார் பள்ளிக்கூடத்திற்கு என்னை முதன் முதல் அனுப்புதற்கான ஆயத்தங்களைச்செய்து கொண்டு என்னை எழுந்து வரும்படி கூப்பிட்டார்; நான் "காய்ச்சல்" என்று அநுங்கியநுங்கிச் சொன்னேன்; "அது எனக்குநேற்றுத்தெரியும்" என்று என் தாய் சொல்லிக்கொண்டு தகப்பனாருக்குத் தெரிவித்தார்; நான் முன்னர்ப்பல முறைகளிற் படிப்பு நெருக்கத்திற்குப் பயந்து காய்ச்சலென்றும் வயிற்றிற் சுகமில்லையென்றும் பொய் சொல்லி வந்தபடியினால் இதனையும் அப்படியே நினைத்து என் தாய் தந்தையர் நான் சொன்னதை நம்பவில்லை. தகப்பனார் வந்து என் உடம்பைப் பரிசித்துப்பார்த்த பின்பே உண்மையென நம்பினார்கள். உடனே எமது பழைய வைத்தியருக்கு ஆள் அனுப்ப, அவர் மருந்துச் செப்புடன் வந்துசேர்ந்தார். வந்தவர் எம்முடைய கையைப்பிடித்து நாடிபார்த்து இது ஏக்கத்தினாலே வந்த சுரம் இதற்கு மருந்து வேண்டாம்; இத்தப்பட்டோலைப்படி குடிநீர் வைத்துக் கொடுங்கள்; ஒருமுறை அறிந்தவரைக்கொண்டு விபூதிபோடுவித்தால் எல்லாஞ் சுகமாய் விடுமென்று சொல்லிப் போய்விட்டார். இஞ்சி அநுபானத்தில் மருந்து தராமலே குடிநீரோடு விட்டுவிட்டாரேயென்பதையிட்டு எனக்குச் சிறிது சந்தோஷமாயிருந்தது. உடனே தகப்பனார் பஞ்சாங்கத்தை யெடுத்துப்பார்த்து இன்று போக இனி நல்ல நாள் எப்போது உண்டென்று பார்ப்போமென்று சொல்லிக்கொண்டு பார்த்தபோது அடுத்தநாளுக் கடுத்த நாளாகிய புதன்கிழமை நாளும் சுபமுகூர்த்தமாக விருப்பக்கண்டு தகப்பனார் சரி தம்பி புதன்கிழமை பள்ளிக்கூடத்திற்குப் போகலாமென்றார். இதோ இத்தமாசம் முழுவதும் நல்ல நாளில்லாமல் அடுத்தமாசக் கடைசியில் மாத்திரம் ஒரு நல்லநாள் இந்தப் பஞ்சாங்கத்தி லிருக்கப்படாதா; இதுவும் நம்முடைய பொல்லாத காலந்தானென்று நினைத்தேன். திங்கட்கிழமை பின்னேரம் எங்கள் புரோகிதர் வந்து விபூதியிட்டுப் பார்த்தபின் காய்ச்சல் நின்றுவிட்டது. செவ்வாய்க்கிழமை பகல் எப்படிப் போனதென்றுந் தெரியவில்லை. செவ்வாய்க்கிழமை யிரவு முழுவதும் பழையபடி பள்ளிக்கு அடுத்தநாட் காலை போகவேண்டுமே என்ற கவலை மனத்தில் உண்டாய் விட்டது; முந்திய இரவுபோல் அன்றிரவும் காய்ச்சல் வருமோ என்றுபார்த்தேன்; காய்ச்சல் சற்றேனுமில்லை. சுகமில்லையென்று சும்மா நடித்தலும் இனிமேல் முடியாது. பொய் நீடித்து நிற்குமா. வயிறார உண்ணாமல், அன்றிரவு படுக்கைக்குப்போனேன்; இரவு முழுதும் கண்ணோடு கண்மூடவில்லை. விடிந்தது விட்டது; உடனே எழுந்தேன். புதன்கிழமையானது. கொலைத்தண்டனை விதிக்கப்பட்டவனுக்கு அக்கொலை நிகழும் தினம் எப்படியிருக்குமோ அப்படியே எனக்கு மிருந்தது. (வரும்.)

காலநிலை.

கமக்காரரெல்லாரும் பெய்தமழை போதாமையினால் தங்கள் வயல்களை எருவிட்டுப் பண்படுத்த முடியாமலிருக்கின்றனர். வயல்வேலையைச்செய்து கொண்டு வந்த சிலரும் பின்னரும் மழை பெய்யாமையால் இடையில் தம் முயற்சியை விடுத்து மேகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். மழைக்கோலங் காணப்படுகின்றதேயன்றி மழைபெய்யக் கண்டிலேம். இனி எவரிடத்திலும் விதை நெல்லில்லாமையினால் அநேகர் விதை மணிக்கென்செய்வதென்று கலங்குகிறார்கள். ஊரவருட் சிலர் சாமானிய நெல்லை விதைநெல்லென்று சொல்லி 1 புஷல் ஏழு எட்டு ரூபாவாக விற்க முயலுகின்றார்கள். இந்த விதைநெல் விஷயத்தில் அரசினர் பட்டினபரிபாலன சங்கத்தார், கிராமச் சங்கத்தார் தலையிட்டுக் கமக்காரருக்கு ஏதும் உதவி செய்யவொண்ணுதா? சிந்திப்பார்களாக.

முத்திரை குத்தும் யந்திரம்.

சில நாட்களுக்கு முன் அரசாட்சியார் ஒரு முத்திரைகுத்தும் யந்திரத்தை அழைப்பித்துக் கொழும்பிலுள்ள முத்திரைக்கந்தோரில் இப்பொழுது அமைத்திருக்கிறார்கள். இதற்குச் செலவழிந்த தொகை ரூபா 10000 ஆகும். இந்தயந்திரம் 50சதமுத்திரைதொடக்கம் ரூபா 1000 வரையில் 10 மாதிரியான முத்திரைகளைக் குத்துகின்றது. இந்த யந்திரத்தை மிகவும் சுலபமாக இயக்கலாம். முத்திரை குத்தப்படவேண்டிய கடுதாசியின் பக்கத்தை அதற்குள் இட்டு வேண்டிய முத்திரைக்காகவுள்ள யந்திரத்தை இயக்கியபின், கடுதாசியை எடுத்துப் பார்க்கும்பொழுது அங்கே குறித்த முத்திரை விருத்தமாகக் குத்தப்பட்டிருத்தலைக் காணலாம். சாதனங்களுக்கு இந்தவிதமாக முத்திரை குத்தப்பட வேண்டுமெனக் கட்டுப்பாடில்லை. ஆனால் இதன் நன்மையை உணர்ந்தவர்கள் தங்கள் சாதனங்களை இதன் மூலமாக முத்திரையிட்டுக் கொள்ளுகிறார்கள். வேலை அதிகரித்தலும், முத்திரை அதிகாரி இன்னும் அநேக யந்திரங்களை அழைப்பித்து ஏற்படுத்தி அதன் மூலமாக முத்திரைகுத்தல் வேண்டுமெனக் கட்டுப்பாடுசெய்ய எண்ணியிருக்கிறார். முத்திரைக்காகவுள்ள சட்டத்திலும், இதை அநுசரிக்கும்படி பிரமாணஞ் செய்வார்கள்.

தாழ்ந்த வருணச் சிறுவர் வித்தியாசாலை.

தாழ்ந்த வருணச் சிறுவர் கல்விகற்பதற்காகச் சிவியாதெருவில் 1926-ம் ஆண்டு தொடங்கிய இவ்வித்தியாசாலை சைவவித்தியாவிருத்திச் சங்கத்தாரின் மேற்பார்வையில் செவ்வனே நடைபெற்று வருகின்றது. மாணவர் தொகையும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இதற்காக முன் அமைக்கப்பட்ட கட்டடம் போதாமையினால் ஒரு புதியகட்டடம் அமைக்கவேண்டியதாயிற்று. ஊரவர்களின் உதவியினால் ஸ்ரீ சைவவித்தியாவிருத்திச்சங்கத்தார் 100மாணவர் கல்வி கற்கத்தக்கதாக இப்பொழுது ஒரு புதிய கட்டடத்தை அமைத்திருக்கின்றனர். இப்பாடசாலைப் புதிய கட்டடம், சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவரான ஸ்ரீ சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்களால் இத்தமீ 1௨ திறந்துவைக்கப்பட்டது. அதன்பின்னர், ஸ்ரீ சு. சிவபாதசுந்தரம் அவர்கள் பேசியபொழுது, பின்வருமாறு கூறினர் இன்று இங்கே சிவபெருமான திருவருளால திறக்கப்பெற்ற இம் மண்டபத்தில் இவ்வித்தியாசாலை நீடூழி வாழ்வதாக. ஊரவர்களுடைய சிரத்தையினாலேயே இப்பள்ளிக்கூடம் இவ்வளவு விசேஷமாக நடைபெறுகின்றது. இங்கு கற்கும் சைவப் பிள்ளைகள் தேவார திருவாசகங்களை நன்றாயோதவேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளை வீட்டிலே காலையிலும் மாலையிலும் தேவாரங்களை ஓதும்படி கேட்கவேண்டும். அதன் மூலமாக வீடுகளும் பரிசுத்தமடையும், இன்னும் வரத்தக்க பிள்ளைகளையும் அனுப்பவேண்டும். எல்லாரும் வித்தியாசாலையில் மிகுந்த அன்புள்ளவர்களா யிருக்கவேண்டும்.

அநுராசபுரம் விவேகானந்தசபை.

௸ சபையின் மூன்றும் வருஷாந்தக் கூட்டம் இந்த௴ 11.ம் 12-ம் திகதிகளில், அநுராசபுரம் சிற்றம்பலம் வீதியிலுள்ள ௸ சபை மண்டபத்தில் நிகழும். அத்தருணம், வருடாந்த அறிக்கைப்பத்திரம் வாசித்தலும், செயலாளர்களைத் தெரிவுசெய்தலும், உபந்நியாசங்களும் நடைபெறும்.

புகைரதப்பகுதியிலும் தபாற்கந்தோர்ப்பகுதியிலும் சேரவிரும்புவோர்க்குப் பரீட்சைகள்.

புகைரதப்பகுதியிற் சேரவிரும்புவோர்க்குரிய பரீட்சை 1928-ம்௵ செப்டெம்பர்௴ 20-ம், 21-ம், 22-ம திகதிகளிற் கொழும்பில் நடைபெறும். அப்பரீட்சைக்குச் செல்ல விரும்புவோர், புகைரதப்பகுதி அதிகாரியிடம் அதற்காகவேண்டிய மாதிரிப் பத்திரங்களை 1928-ம்௵ ஆகஸ்ட்௴ 25 திகதிக்குமுன் எழுதிப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படி எழுதும்போது தாம பிறந்த திகதியையும் தாம் சித்திபெய்திய வகுப்பையும் குறிப்பிடுதல் வேண்டும். இவர்கள் பரீட்சைத்திகதியிலன்று 17 வயதிற்குக் குறையாதவர்களாயும் 25 வயதுக்குமேற்படாதவர்களாயும் இருத்தல்வேண்டும்.

தபாற்கந்தோர்ப்பகுதியிற்சேரவிரும்புவோர்க்குரிய பரீட்சை 1928-௵ நவம்பர்௴ 7௳ கொழும்பில் நடைபெறும். இவர்கள் 17 வயதிற்குக் குறையாமலும் 23 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அப்படிச் சேரவிரும்புவோர் தங்கள் விண்ணப்பப் பத்திரங்களை 1928-ம்௵ ஆகஸ்ட்௴ 30௳முன் தபாற்கந்தோர் அதிகாரிக்கு அனுப்புதல் வேண்டும்.

தேகவியோகம்.

காலியிலுள்ள சிவன்கோயி லருச்சகராக விருந்த பிரம்மஸ்ரீ த. மார்க்கண்டேயக் குருக்கள் அவர்கள் இந்தமாதம் கதிர்காமத்தில் தீர்த்தோற்சவத்தின்று தம்முடல் நீத்துச் சிவபத மடைந்த செய்தியை யாத்திரிகர்கள் விசேஷமாகப் பேசக் கேள்விப்பட்டோம்; இவரது ஜனனஸ்தானம் இணுவில்; புங்குடுதீவில் விவாகஞ் செய்து அங்குள்ள கந்தசுவாமி கோயிலிற் சண்முகமூர்த்தியைப் பிரதிட்டை செய்து வழிபட்டு வந்தவர். பின் புங்குடுதீவிலேயே சிவாலய மொன்று கட்டுவித்தார். பிரதிட்டை செய்யவேண்டிய சிவலிங்கத்தைக் காசியிலிருந்து கொண்டுவந்தார். மற்றைய சிலாவிக்கிரகங்களும் எழுந்தருளி மூர்த்திகளும் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. சுற்றுமதிலும் மண்டபங்களும் முடிந்திருக்கின்றன. ஸ்தூபி மாத்திரம் வேலை நடந்துகொண்டிருக்கின்றது. இதைப் பூர்த்தி செய்து கும்பாபிஷேகஞ் செய்யவேண்டிய ஆயத்தங்கள் செய்திருந்தார். யாத்திரை செய்யவேண்டிய சுகம் இல்லாதிருந்தும் வழக்கப்படி கதிர்காமசுவாமியைத் தரிசிக்க வேண்டுமென்று சென்ற இவர் திடபத்தி வியக்கற்பாலது. இவருடைய தேகம் கதிர்காமத்திலே முத்திலிங்கசுவாமிக்குப் பக்கத்திலே அடக்கஞ் செய்யப்பட்டது. ௸ குருக்கள் அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில், துருவதப்பு மாணவராயிருந்து தமிழ், சமஸ்கிருதம், இங்கிலீஷ் என்னும் மூன்று பாஷைகளும் கற்றவர். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் மிகுந்த சாமர்த்தியமுடையவர். சிவத்தொண்டு செய்வதில் கண்ணுங் கருத்துமா யுள்ளவர். இல்வாழ்க்கையிலிருந்தாலும் துறவிபோல் ஒழுகியவர். இவருடைய தெய்வபக்தியும் இவரது மரணமும் அற்புதமானவை' —கடித.

ஓர் புதிய சைவவித்தியாசாலை.

ஏழாலையைச் சார்ந்த குப்பிளானில் விக்கினேசுவர வித்தியாசாலை எனப் பெயரிய சைவப் பள்ளிக்கூடமொன்று, அவ்வூர்வாசிகளின் நன் முயற்சியினால், நியாயதுரந்தரர் ஸ்ரீ. வ. தம்பிராசாவும் அவர் சகோதரரும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தார் பேரில் தருமசாதனஞ் செய்த நிலத்தில், புதிதாயமைக்கப்பெற்ற கட்டிடத்தில் சென்ற சிலவாரங்களாக நடைபெற்று வருகின்றது. இவ் வித்தியாசாலை மண்டபத்தில் இந்த ஆடி௴ ௨௧௳ ஞாயிற்றுக்கிழமை (5-8-28) மாலை 7 மணியளவில் ஓர் சைவப்பிரசங்கம் நிகழ்ந்தது. தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயிற்று; சைவ வித்தியா விருத்திச் சங்கக்காரியதரிசி ஸ்ரீ மு. சி. இராசரத்தினம் அவர்கள் அக்கிராசனம் வகிக்க, உயர்திரு சுவாமி உருத்திரகோடீசுவரர் அவர்கள் 'மனம்' என்னும் பொருளைப் பீடிகையாகக் கொண்டு கல்வியின் அவசியத்தைக் குறித்து ஓர் அரிய விரிவுரை நிகழ்த்தினர். அதன்பின் அக்கிராசனர் சைவக்கல்வி அவசியம் வேண்டும் என்பதை வற்புறுத்திச் சபையாருள்ளத்தில் நன்கு பதியுமாறு பேசினர். பின்னர் சைவ வித்தியாவிருத்திச்சங்கப் பள்ளிக்கூடங்களைப் பார்வையிடுபவராகும் ஸ்ரீ செ. மயில்வாகனம் அவர்கள், சங்கத்தின் நோக்கத்தையும், சைவப் பள்ளிக்கூடங்களின் இன்றியமையாமையையும், புதிய பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய உபகரணங்களையுங் குறித்து விளக்கப்படுத்தினர். அதன்பின் பிரமஸ்ரீ பொ. [illegible]தாசர்மா அவர்கள் சபையாருக்கும் அக்கிராசனருக்கும் பிரசாரகர்களுக்கும் நன்றிகூறினர். அங்குச் சமுகமாயிருந்த அன்பர்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்தனர். குப்பிளானிற் கோயில்கொண்டருளியிருக்கும் விக்கினேசுவரப் பெருமானின் கருணோதயமாகத் தொடங்கிய இவ்வித்தியாசாலை செவ்வனே நடைபெற ஊரவர்களுக்கும், உத்தியோகத்தினிமித்தம் பிறவூர் சென்றிருக்கும் அன்பர்களுக்கும் இவ்வித்தியாசாலை விஷயத்தில் ஊக்கமும் உதாரகுணமும் உண்டாகும்படி அப்பெருமான் அருள்புரிவாராக. —கடித.

மாவிட்டபுரக் கந்தசுவாமிகோயில் உற்சவத்திற்காய விசேஷ புகைரதங்கள்.

மாவிட்டபுரக்கந்தசுவாமிகோயில் திருவிழாவுக்குப் போகிறவர்களின் வசதிக்காக, 1928-ம்௵ ஆகஸ்ட்௴ (ஆவணி) 12-ம் 14-ம் 15-ம திகதிகளிற் பின்னுற் காணப்படும் விசேஷ புகைரதங்கள் ஓடும்.

	12௳	14௳		15௳
மேல்	காலை	காலை	காலை	காலை
பளை	8-0	4-30	9-45	9-45
யாழ்ப்பாணம்	9 30	5-12	11-35	11-35
மாவிட்டபுரம்	10-13	6-24	12-34	12-34
கீழ்	சாயந்தரம்	காலை		காலை
காங்கேசன்துறை	4-0	6-50		6-50
யாழ்ப்பாணம்	4-54	7-37		7-37
பளை	6-48	9- 3		9- 2.

காங்கேசன்துறையிலிருந்து சாயந்தரம் 5-30 க்கும், கொழும்பிலிருந்து மாலை 6-25க்கும் புறப்படும புகைரதத்தொடர்களைத்தவிர, வழக்கமானமற்றப் புகைரதத்தொடர்கள் 1928-ம்௵ ஆவணி௴ 9௳ தொடக்கம் 15௳வரைக்கும மாவிட்டபுரத்தில் தங்கும்.

ஆவணி௴ 15௳ காங்கேசன்துறையிலிருந்து பகல் 1-12 க்கும் யாழ்ப்பாணத்திலிருந்து பகல் 2-23க்கும் புறப்படும புகைரத மோட்டோருக்குப்பதிலாக ஒரு விசேஷ புகைரதத்தொடர், புகைரத மோட்டோர் தங்கும் ஒவ்வொரு இடங்களிலும் தங்கிப்போகும்.

ஆவணி௴ 14-ம் 15-ம் திகதிகளிற் காங்கேசன்துறையிலிருந்து காலை 6-48 க்குப் புறப்படும் புகைரத மோட்டோர் அங்கிருந்து காலை 7-35 க்குப் புறப்பட்டு யாழ்ப்பாணம் புகைரதஸ்தானத்திற்கு 8-25 க்கு வந்துசேரும்.

நூல்களைப்பற்றிய குறிப்பு.

திருப்புகழ் பாராயணத் திருமுறை.

இத்திருமுறை வள்ளிமலை ஸ்ரீ சுவாமி சச்சிதானந்த அவர்களாற் றொகுக்கப்பட்டுளது. இப்பிரபந்தம் குருவணக்கம் முதலாக இரட்சிப்பு ஈறாக 42 விஷயங்கட்கு இயைய நுட்பமாகத் தொகுக்கப்பட்டுளது. இதன்கண் கந்தரலங்காரம் கந்தரனுபூதி திருவகுப்பு முதலிய பிரபந்தங்களிலுள்ள திருப்பாடல்களும் இயைபுநோக்கி விரவப்பட்டிருக்கின்றன. திருப்புகழைப் பாராயணஞ் செய்யும் அன்பர்கட்கு இத்திருமுறை வாய்ந்ததாகும். இதனை அச்சிட்டோர் அரிய தமிழ்நூல்களையெல்லாம் அழகுற அச்சிடுவதிற் பேர்படைத்தவர்களாகிய சென்னை மயிலாப்பூர், அல்லயன்ஸ் சங்கத்தாரவர். பிரதிகள் கண்டோர் மனசையுருக்கும் அழகிய சித்திரங்களுடன் உயர்ந்த அழுத்தமான கடிதத்திற் சுத்தமாக அச்சிட்டு நன்குகட்டப்பட்டுள்ளன. விலை ரூபா 1. இத்திருமுறையின்கண்ணுள்ள கதிர்காமத் திருப்புகழை இங்கே தருகின்றோம்.

உடுக்கத் துகில்வே ணுநீள்பசி
யவிக்கக் கனபானம் வேணுநல்
ஒளிக்குப் புனலாடை வேணுமெய்
யுறுநோயை-
ஒழிக்கப் பரிகாரம் வேணுமுன்
இருக்கச் சிறுகாணி வேணுமோர்
படுக்கத் தனிவீடு வேணுமிவ்
வகையாவுங்-
கிடைத்துக் க்ருஹவாசி யாகிய
மயக்கக் கடலாடி நீடிய
கிளைக்குப் பரிபால னாயுயி
ரவமேபோம்-
க்ருபைச்சித் தமுஞான போதமு
மழைத்துத் தரவேணு மூழ்பவ
கிரிக்குட் சுழல்வேனை யாளுவ
தொருநாளே;
குடக்குச் சிலதூதர் தேடுக
வடக்குச் சிலதூதர் நாடுக
குணக்குச் சிலதூதர் தேடுக
வெனமேவிக்-
குறிப்பிற் குறிகாணு மாருதி
யினித்தெற் கொருதூது போவது
குறிப்பிற் குறிபோன போதிலும்
வரலாமோ;
அடிக்குத் திரகார ராகிய
வரக்கர்க் கிளையாத தீரனு
மலைக்கப் புறமேவி மாதுறு
வனமேசென்-
றருட்பொற் றிருவாழி மோதிர
மளித்துற் றவர்மேல் மனோகர
மளித்துக் கதிர்காம மேவிய
பெருமாளே.

பத்திரசக் கீர்த்தனை.

இப்பத்திரசக் கீர்த்தனைகள் மாவிட்டபுரத்தின்கண்ணே கோயில்கொண்டருளிய கலியுகவரதராகிய கந்தசுவாமியார் மீது மயிலிட்டி ஸ்ரீ வேலுப்பிள்ளை உபாத்தியாயராற் பாடப் பெற்றனவாம். பல அறிஞர்கள் இந்நூலிற்குப் பாயிரங் கூறியுள்ளார். பாக்கள் குகன்மீது பத்தியைக் கிளரச்செய்யும்பான்மையன. விலை பிரதியிற் காட்டப் படவில்லை.

முருகன் கீர்த்தனைப் பதிகம்.

முருகன் கீர்த்தனைப்பதிகமும் நடராஜ பஞ்சரத்தினமும் மண்டைதீவு ஸ்ரீ சி. அகிலேஸ்வரசர்மாவால் இயற்றிப் புத்தகரூபமாக வெளியிடப்பட்டுள்ளன. விலை சதம் 10.

இம்மூன்று பிரதிகளையும் அனுப்பியோர்க்கு நன்றி கூறி அவைகளை உவந்தேற்றும்.

அநாதபிள்ளைகளும் அந்தர நிலையும்.

இவற்றை வாசிக்கும் கனவான்களே! சென்ற 8-7-28-ந் திகதியன்று கொழும்பிலிருந்து காலை 9-30 மணியளவில் யாழ்ப்பாணப்புகைரத மேறி யல்விடமிருந்து புறப்பட்டேன். இரதம் கம்பகாப்புகைரதஸ்தானத்தைக் கிட்டியபோது வெள்ளப்பிரவாகமே காரணமாக அவ்விடத்தில் நின்றுவிட்டது. அதில் பிரயாணம் செய்துவந்த எங்களில் மூவர் அதினின்றிறங்கி வெள்ளத்தின் சிறப்பையும் ஊரின் நிறத்தையும் உற்று நோக்குமாறு வீதிவழியே வரும்போது இடதுபைப்பக்கமாகப் பிள்ளைகள் கூவுகிறைச்சலைக் கேட்டங்கணமேகினோம். வாட்ட முகத்தோடும் கேவல நிலையோடும் 90 பிள்ளைகள் இருந்து கல்வி கற்பதையும் ஒருபாத்தியாயர் நடத்திக் கொண்டு நிற்பதையும் நோக்கினோம். பாடசாலைக் கட்டிடமோ இடையரின் வசிப்பிடத்திலும் கேவலமாயிருந்தது. உபாத்தியாயரிடம் பாடசாலையின் நடைமுறையை விசாரித்த போது, இப் பாடசாலையானது ஓர் பொதுசன அநாதபாடசாலையென்றும் இதற்குப் போதிய நிதியின்மையாற் பலவிடங்களிலமைந்து கிடக்கும் கந்தோருத்தியோகத்தரிடமும் தம்போன்ற பெரியோரிடமுமிருந்து நிதி சேர்த்தே நடைபெறுகின்றதென்றும், அந்நிதியும் காணமையால் இப்போது அந்தர நிலையிலிருக்கிறதென்றும் விளம்பினர். அவர்களில் 30பிள்ளைகளளவில் பெண்களாகவும், அப்பெண்களிற் சிலர், ருதுவானவர்களாகவும் காணப்பட்டனர். தமிழ்ப் பிள்ளைகளுமுண்டாவென விசாரித்தபோது, ஏழு வயசுடையயோர் சிறுமியைக் காட்டினர். அப்பிள்ளையை யழைத்து எந்த ஊரிலிருந்து வந்தாயென்று தமிழ்ப் பாஷையிற் கேட்ட பொழுது தமிழ் விளங்காமை கண்டு ஆங்கிலத்திற் கேட்டேன். பிள்ளை கொடுத்த பரிதாபவிடைகளாவன: என் ஊரின் பேர், பெற்றோர், உற்றோர் யாவரையும் நானறியேலன்; நான் இவர்களின் கைக்குள்ளாகி 3வருஷங்களாயின எனப் பகர்ந்தனள். உணவு விஷயம் எப்படி நடக்கிறதென்று வினவியபோது, பிள்ளை கொடுத்த விடையைக்கேட்டு அவ்விடத்திலேயே மூவரும் கண்ணீர்விட்டோம். பெற்றவளறியாள் பிள்ளையருமை. இப் பிள்ளைகளினருமையைப் பல தருமவான்களே யறியவேண்டியது. பிள்ளை சொல்லியவையாவன: காலையில் இவ்விரு அப்பங்களொன்றும், மத்தியானத்தில் அடி வயிற்றிலிடிவிழுவதுபோலக் கொஞ்ச ரொட்டியென்றும், மாலையிலேயே சாதம் கறி கிடைக்குமென்றும் சொல்லக் கேட்டோம்.

பெற்றோரின் முன்னின்று துள்ளிக் களிக்க வேண்டிய இச் சிறுவர் சிறுமியர் உற்றோர் பெற்றோரின்றி வறுமைக்காளாய்க் கஷ்டப்பட்டுக் கற்கும் மாதிரியைக் கண்ணுற்ற யாம் துக்கம் கொண்டவர்களாய்க் கோபமொரு பக்கம் எழ அவ்வழியேயிதன் முகாமையாளனும் சிங்களசாதியத்தாரொருவரைக் காணலானோம். பாடசாலையின்தர நிலையையும் பிள்ளைகளின் குறைவுகளையும் பற்றிப் பேசியபோது, ஒரு பிள்ளைக்குச் சராசரி வருஷம் ரூபா 25 தான் கிடைக்கின்றனவென்றும், அவ்வளவோடு இரட்டை முறையிலும் எள்ளளவேனும் கூட்டிக் கொள்ள இயலாதென்றும் கூறி, இன்னும் இரண்டொருமாசத்துள் இதைத் தவிர்த்துவிட இருக்கிறோமென்றும் கவலையோடு சொன்னார். அவ் வச்சிரம் போன்ற சொல்லைக் கேட்ட நாம் கோடையிடி கேட்ட நாகம்போல், ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளு மறிவிழந்தவர்களாய், ஒன்றும் பேசாது வெளியேறினோம். பசியால் விழுந்தவனை மாடேறி மிதித்த வண்ணமாய், அன்று எங்கட்கு உணவும் கிடைக்கப்பெறாது முட்டுண்டவர்களாய்ப் பசியோடு மாலை 4 மணிவரையில் அவ்விடமிருந்து புறப்பட்டோம். பிரயாண நேரத்தில் என் மனதிலுண்டான துக்கம் இவ்வளவென்று சொல்ல என்னாவுமெழா. இப்பத்திரமுமோ இடமுங்கொடாதென அஞ்சிவிடுகிறேன். அப்பாடசாலையைப்பற்றி யடியேனறிந்த சரித்திரமிவ்வளவேயாகும். கொழும்புசென்று இன்னும் அறியவேண்டியனவற்றை விபரமாயறிந்து வெளிப்படுத்த எண்ணியிருக்கிறேன்.

பல்லோரால் நல்லோரென மதிக்கற்கிடமாய தனவான்களே! கல்விச் செல்வர்களே! இலங்கைமாதின் கண்களிலொன்றும் இப்பாடசாலை கெட்டுப்போகும் இத்தருணத்தில் முன்வந்து உள்ள குறைவுகளை ஆராய்ச்சிசெய்தும், கல்வியே இத்தீவில் மேலோங்க வேண்டுமென்று அவாவிநிற்கும் நம் ஆங்கில அரசின் அங்கத்தவரிதைக் கண்ணுறுகின்றனராவென்றும் அப்படியாயின் அக்குறைவை யவர்கட்கு மனுப்பண்ணி உன்னத நிலையுடன் மேலோங்கித் துலங்கத்தக்கதாய் உதவி புரியுமாறு கோருகின்றேன்.

பாடசாலை முகாமையாளன் இன்னோர் செய்தியைச் சொன்னார். அதனை இன்று நினைத்தாலும் என்மனம் பதறுகின்றது. எழுதவுமோ இயலாதபடி கையும் நடுங்குகின்றது. ஓர் காலத்தில் இயலாதென்று தவிர்த்துவிடுவார்களேயானால் .... சிறுவரையீன்ற செல்வர்களே! சிறுமியர்களையீன்ற சீமான்களே! சகோதர சகோதரிகளே! அவ்வாலிபப் பெண்பிள்ளைகளும், சிறுமிகளும் சிறுவருமடையும் நிலையென்ன? அதைப்பற்றி யானுங்கட்கதிகம் அறியத்தர வேண்டியதில்லை.

நான் என்ன செய்வது.

பாடசாலைகளையும் கல்லூரிகளையும் நடத்துவோரேயானால் ஒவ்வோர் பிள்ளைகளிடமும் சொல்லி அவ்வவர்களாலியன்ற பணத்தைக் கொண்டும் இல்லறநெறி நிற்போர் தாமும் தம்மைச் சேர்ந்தோருமாகத் திரட்டியும் பட்டினியால் வருந்தாதிருக்கும் அப்பாடசாலை தளர்ந்துபோகவிடாது பெரியோரின் உதவியால் அரசினர் செவிக்கேறும்வரையும் இது அதிர்த நேரமே தொடங்கி உதவிபுரிவீர்களென அதிக சந்தோஷத்தோடு எதிர்நோக்கியிருக்கின்றேன்.

இவற்றை வாசிக்கும் கல்விமான்களே! பெரியோர்களே! மனமொரு நிலைப்பட்டிராத இந்நேரம் யான் எழுதிய வாக்கியங்களில் யாதேனும் பிழைகள் நேரிடின் அவற்றைக் களைந்து குணங்களைச் சிரமேற் கொள்ளுமாறு வேண்டிநிற்கும்.

எம். எஸ். செல்லப்பா,
போட் கொம்மிஷன் கந்தோர்,
கொழும்பு.

தேவை.

யாழ்ப்பாணம் இணுவில் சைவக் கலவன் பாடசாலைக்கு ஒரு பெண் உபாத்தியாயர் தேவை. 2-ம் அல்லது 3-ம் தாரதரப் பத்திரமாவது அல்லது V S L C பத்திரமாவது பெற்றவரா யிருத்தல் வேண்டும். இந்தமாசம் முடியமுன் விண்ணப்பங்களை ௸ வித்தியாசாலை மானேஜருக்கு அனுப்புக.
(M s 1270)

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்.

இச்சங்கத்தின் பத்தாவது வருஷாந்தக் கூட்டம் இந்த மாசம் ௪௳ (20—8—28) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி வரையில் மேற்படி சங்கக் கந்தோரில் நடைபெறும். அத்தருணம் மேற்படி சங்க நிருவாக கர்த்தர்களின் அறிக்கைப்பத்திரமுங் கணக்குகளும் பார்வையிடப்படும். இன்னுஞ் சங்கத்திற்கு ஆகவேண்டிய விஷயங்களும் ஆலோசித்துத் தீர்மானிக்கப்படும்.

யாழ்ப்பாணம், ச. ஆறுமுகம்பிள்ளை
9—8—28. காரியதரிசி.
(Mis. 1272.)

யாழ்ப்பாண ஐக்கியவியாபாரசங்கம் லிமிட்டெட்.

1918-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

பிறதேசங்களிலிருந்து
நெல்லு
அரிசி
மற்றுஞ் சாப்பாட்டுக்குரிய சகல சாமான்களும், பலவகையான சாய்ப்புச் சாமான்களும் வருவித்து விற்பவர்கள்.

இது யாழ்ப்பாணத்தவர்களால் நடத்தப்படும் பிரபலமான வர்த்தகம்.

சாமான்கள் திறமானவை.

விலை சகாயம்.

சுதேச முயற்சியைத் தைரியப்படுத்துங்கள்.

தங்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

பெரிய கடையின் வடமேல் வீதிகளில் இக்கம்பெனிக் கடைகள் நடைபெறுகின்றன.

(Q. 103)

நெடுந்தீவுச் சகோதரர்க்குப் பிரதாப சோபனம்.

தேசாபிமானப் பிரபுக்களே! எங்கள் நெடுந்தீவுச் சகோதரர்களே! குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்புபோல்வார் சிலரின் ஏவுதலுக் குட்பட்டு, டைமாகாண ஏசண்டரவர்கள் உங்களூரைத் தரிசித்தசமையம், வந்துகூடிய சில பரதேசிகள், குடிவெறியரின் கூக்குரலி லெடுபட்டு, சகல சனசம்மத விசாரணையின்றி உங்களூரில் மதுக்கடை திறக்கப்படவேண்டுமென உத்தரவுசெய்து, யாழ்ப்பாணக் கச்சேரியில் மதுக்கடை விற்பனவெலம் பிரசித்தப்படுத்தியபோது, நீங்களனைவரும் உங்கள் தேசாபிமானத்திலும், பிரசாதனி வளர்ச்சியிலும் கண்ணுங் கருத்துமாய்க் குறித்த நாளன்று யாழ்ப்பாணக் கச்சேரிக்குச் சென்று, 'எங்களூருக்குத் தவறணை வேண்டாம்; நீர் தவறணைக் குத்தகை கூறவும் விற்கவும் வேண்டா'மென, ஏசண்டரை வேண்டியும், அவர் மறுத்துத் தனதெண்ணம் நிறைவேற்ற முயன்றபோது, யாதொருவரும் குத்தகை கேளாதபடி செய்துவிட்டீர்களாமே! உங்கள் ஆண்மையை நாங்கள் என்னென்று சொல்வது. தவறணை திறப்பதில் விருதுக்கொடி தூக்கி நடிக்கும் பிரபுசிகாமணிகளாவது, உங்களாண்மைக்கஞ்சிப்போலும் இக் குத்தகை விலைப்படக்கூடிய வழிவகை செய்யாமல் விட்டு விட்டார்களே. இது விஷயத்தை, இச் சாதன மங்கை தெரியப்படுத்தியவுடன், அனலைதீவு மதுவிலக்காளராகிய நாங்கள், எங்கள் மனப்பூரிப்பை உங்களுக்குக் காட்டாமல் விடமுடியவில்லையே யென்றாலும், உங்கள் வெற்றியைப்பற்றி நாங்களும் ஒருவகையிற் பொறாமை கொள்ளவேண்டியவர்களாகவுந் தெரிகிறது. எப்படியெனில் நாங்களும் காரைநகர்வாசிகளும் இம்மதுவிலக்குக்கு முற்றெடுக்கமுடையோ மென்றாலும், எங்கள் தொடக்கம் அரசாட்சியார் மதுக்கடைகளை வேணும் அல்லது வேண்டாம் என்று சொல்லாத காலத்தில், நடைபெற்றுச் சித்திபெற்றது. உங்கள் ஊக்கமோவென்றால் அரசாட்சி மதுக்கடை திறக்கப்படவேணுமென்று பரதேசிகள் குடிவெறியின் ஆதரவைக்கொண்டு கங்கணங்கட்டி மாரடித்த சமையத்தில், சித்திபெற்றிருக்கிறது. இது மட்டோ! இன்னுமொருவகையில் உங்களூக்கம் கவனிக்கப்படத் தக்கது. அதாவது; நாங்கள் மதுக்கடை நீக்கிய காலம் மதுபானம் சகசமாய் நடைபெற்ற காலம். நீங்களூக்கமெடுத்த இக்காலமோ வென்றால் தடுக்கப் பட்டிருந்த இவ்வளவு காலமும் கள்ளச்சேர்வை கள்ள விற்பனவு வகையில் அரைவயிறு கால்வயிறு குடித்து வந்தாலும், குடிகாரரின் மதுவேட்கை யதிகரித்து, இருவன் வளர்த்த குதிரை உணவுவேட்கை யதிகரித்து இராசாவுடைய தாடிமயிரையும் புல்லென்று கவ்விப்பிடித்த சமையம்போன்றகாலமாகும். வழக்கமாய் உபயோகித்துவந்தபொருளின் அருமைதெரியாது. நெடுங்காலங்கிட்டாதிருந்த பொருள், கிடைக்கப் போகின்றதென்றவுடன், மதுக்குடித்துக் களிகொண்டாடும் தினவெறியர் எவ்வளவு அங்கலாய்ப்புறுவர் என்பது சொல்லவும் வேண்டுமோ. இச்சமையத்தில், நீங்கள் முயற்சித்துச் சித்திபெற்றது எத்துணை மடங்கு வியக்கத்தக்கதாயிற்று. அருமைச் சகோதரர்களே! நாங்கள் பொறாமைப்படவேண்டியதாயிற்றென இதனால் வெளிப்படுத்தியது, அன்பினிமித்தம் கூறியவாக்கன்றிப் பிறிதொன்றன்று. ஆகையால் இதுவிஷயத்தில் எங்களை மன்னித்து, எங்கள் முயற்சியும் இடையூறின்றி நிலைபெறுமாறு உங்களாசியை விரும்பி, உங்கள் தேசாபிமானமும், மனச்சமாதானமும், சகோதரத்துவமும், பிரசாதனி வளர்ச்சிக் கவனமும், என்றும் நிலைபெற்றுய்வடைய எப்பொருட்கு மிறைவன் அருளை வேண்டி மனமுவந்து பிரார்த்திக்கின்றாம். ஒவ்வொரு ஊரிலும் இப்படி யூக்கமெடுத்தாலோ!

அனலை மதுவிலக்கபிமானி.

சிங்கப்பூர் இணுவை வாசிகளின் அநுதாபம்.

கனந்தங்கிய இந்துசாதனப்
பத்திராசிரியர் அவர்களுக்கு! —
அன்பார்ந்த ஐயா?

இவ்வநுதாபத்தைத் தங்கள் மதிப்புள்ள சாதனத்தின் ஓர் பகுதியில் வெளியிடும்படி வேண்டுகிறேன்.

தங்கள் இந்துசாதனம் 40-ம் புத்தகம் 3-ம் இலக்கப் பத்திரிகையில் வெளிவந்த "இந்துவாலிபர் சங்கமும் இந்துகுமார சபையும்" என்ற மகுடநாமத்தின் கீழ் வரைந்துள்ள நிருபத்திற் கைச்சாத்திட்டவர்களாகிய சிங்கப்பூர் இணுவைவாசிகள் தங்கள் பெற்றோரால் அற்ப கல்வி யூட்டப் பெற்றவர்களாய்ச் சீவனஞ்செய்தற் பொருட்டு அந்நியதேசங்களுள் ஒன்றாகிய சிங்கப்பூரில் தங்கியிருந்தும், தம்நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றிச் சிந்தித்து வருகின்றார்களென்பதைக் கேட்குந்தோறும் மனம் மிகச் சந்தோஷமடைகின்றது.

தேசபக்தர்களாகிய இவர்கள் தம் தாய்நாடாகிய இணுவிலில், கண்டுகேட்டு அநுபவித்திராததும், கன்னமுமாகிய "ஒற்றுமை" என்னும் ஓர் பழக்கத்தைப் பழகி, தாம்பழகிய அப்பழக்கத்தை இணுவிலிலும் பரப்புதற்குக் கொண்ட நோக்கமானது சாலவும் வியக்கற்பாலதே!

அவினும் தாய் நாடாகிய இந்த நாட்டிலே ஜனசமூகமாத்திரையானும் அவர்களின் விடாமுயற்சியானுமே யொழிய, வேறு வைதிகத்திரங்களினாலும் நன்னிலை அடைதல் அரிதென்றெண்ணிச் செய்கின்றனவாகிய கோயில்கள், மடங்கள், சங்கங்கள் மாத்திரமின்றிப் பொற்கல்கள் முதலியன எல்லாம் பெரும்பான்மையும் கட்சிவாரி இருபிரிவினவாகி நடந்து வருதலைச் சிங்கப்பூரில் உள்ள இணுவைவாசிகள் அறியாதிருப்பதேனோ? இவைகள் இவ்வாறாக அமெரிக்க பாதிரிமார் வந்து யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்தோறுஞ் சென்று தங்கள் மதபோதனைகளைப் போதித்தும், போதிப்பித்தும், பாடசாலைகளை ஆங்காங்கே நியமித்தும், வைத்தியசாலைகளை அமைத்தும், இன்னும் இவைபோன்ற பல வழிகளினாலும் தம் சமயத்துக்கு அநேகரைத் திருப்பவும், இணுவிலில் உள்ளவர்கள் மாத்திரம் அந்நிய மதமாகிய கிறிஸ்தசமயத்திற்குத் திரும்பாது நிற்றற்கேதுவாகிய கல்வி யறிவை யூட்டியதும், இவ்வூரவர்கட்கு மாத்திரமன்று இதன் அயற் கிராமங்களாகிய உடுவில், கோண்டாவில், தாவடி, சுதுமலை முதலிய ஊர்களில் உள்ளவர்கட்கும் கல்வியறிவோடு சமய அறிவை யூட்டியதும், நாற்குறையுளெழுபத்தைந்தாண்டுகளுக்கு மேலாக விளங்குவதும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதலிய சைவப்பெரியார்களானும் ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளை, பீ.ஏ, பீ.எல்; முதலிய ஆங்கிலமேதாவிகளினாலும் சமயப்பிரசங்கங்களோடு அறிவுப் பிரசங்கங்களும் செய்தற்கேதுவாயிருந்ததும், சிங்கப்பூரில் உள்ள இணுவைவாசிகட்கும், இவர்கள் முன்னோர் பின்னோர்கட்கும் மற்றைய எவர்கட்கும் கல்வியறிவை யூட்டியதும், ஊட்டப்போவதும், இன்னும் எல்லாவிதமான பொது நன்மைக்கென உழைக்கக்கூடிய செயல்கள் எல்லாவற்றிற்கும் ஏற்ற நிலைக்களமாயிருப்பதும் ஆகிய "இணுவிற் சைவப்பிரகாசவித்தியாசாலை"யொன்று பொதுவிடமாயிருப்பவும் இணுவைவாசிகளுள் மறைந்திருக்கும் இவர்கள் பொதுவிடம் ஒன்று வேண்டுமெனப் பதறுவதேனோ? எதற்குப் பொதுவிடம் என்பதைத் தயவுசெய்து கூறுவாராக. "இந்துகுமார சபை" யெனப் பெயரியதோர் சபைநிறீஇ ஏறக்குறைய இருபத்தேழாண்டுகட்கு மேலாகின்றனவே! இச்சபையாரால் செய்விக்கப்பெற்ற உபந்நியாசங்களும் பிறவும் அவ்வக் காலங்களில் இந்துசாதனம் முதலிய நம் தேசப் பத்திரிகைகளிலும், ஞானசாகரம் முதலிய வடதேசப்பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றனவே! இதனைச் சிங்கப்பூரில் உள்ள இணுவைவாசியுணராது "இருகட்சியாக நடத்துகின்றார்களாமே! வெட்கம்" என வரைகின்றாரே. இது வெட்கமான காரியமா? ஒரு ஊரிலே இரண்டு சபைகள் நடப்பதானால் வரும் தீமைகள் தான் யாதோ? இந்துகுமார சபை யென ஓர் சபை நெடுங்காலமாக நடந்துவரவும் அச்சபைக்கு எதிராக இப்போது தோற்றிய "இந்துவாலிபர் சங்க"த்தையன்றோ சிங்கப்பூரில் உள்ள இணுவைவாசிகள் குறைகூறவேண்டியது. மேலும் எல்லாவற்றிலும் பெரியதோர் வெட்கமான காரியமொன்று இணுவிலில் நடப்பதைச் சிங்கப்பூரிலுள்ள இணுவைவாசிகள் அறியாதிருப்பதேனோ? இணுவிற் சைவப்பிள்ளைகட்கென ஓர் சைவவித்தியாசாலை இருப்பவும் தம்பிள்ளைகளை, தம்முன்னோர் கற்ற வித்தியாசாலை என்பதையும் உணராது கிறிஸ்தவ வித்தியாசாலைக்கு விட்டுக் கற்பிக்கின்றார்களாமே! அந்தோ! இவர்களிடத்தில் சமயாபிமானம் இருக்கின்றதா? பெரியோர்களே! சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்!!

இவர்போன்ற இணுவைவாசிகள் தோற்றிய பின் தான் இத் தீச்செயல்கள் இணுவிலில் நிகழுகின்றன. இதனினுமமையாது இவ்வூரவர்கள் தம் பிள்ளைகளைச் சமீபத்தில் உள்ள இச் சைவ வித்தியாசாலைக்கு அனுப்பாது தூரத்திலுள்ள பிற வித்தியாசாலைக்கு அனுப்புகிறார்களாமே! இவர்கள் கருத்து என்னோ? இவ்வூர்ச் சைவ வித்தியாசாலையை அழிக்க வேண்டும் என்ற கருத்தா? அன்றேல் ஆக்கவேண்டுமென்ற கருத்தா! இதனை வாசிக்கும் நேயர்களே நன்கு சிந்தியுங்கள்! இது போன்றவற்றையன்றோ இணுவிலிலுள்ள சிங்கப்பூர்வாசிகள் பத்திரிகைகளின் வெளியிட்டு ஊரவர்களைத் திருத்தவேண்டியது. இவைகள் ஒன்றையும் இணுவைவாசிகள் சிந்தியாததேனோ? இது கலிகாலமகிமைதானோ?

சிங்கப்பூரில் உள்ள இணுவைவாசிகள் இந்துவாலிபர் சங்கத்தார் செய்வித்த சொற்பொழிவுகளை இந்துசாதனத்திற் கண்டு மகிழ்ந்தார்களேயன்றி இந்துகுமார சபையார் செய்வித்த உபந்நியாசங்களைக் கேட்டு மகிழவில்லையே! இதனால் இவருடைய மனப்பான்மை எத்தகைமைத்து என்பதை அறிஞர்கள் நன்கு அறிவார்களாக.

இங்ஙனம்
பழையகாரியதரிசி
இந்துகுமாரசபை

I. தெல்லிப்பழைக் கிராமச்சங்கத் தலைவர் யாழ்ப்பாணத்திலுள்ள ஏனையகிராமச்சங்கத்தலைவர்களுக்கு அனுப்பிய கடிதம்.

தெல்லிப்பழைக்கிராமச்சங்கத்
தலைவரிடமிருந்து
……………கிராமச்சங்கத் தலைவருக்கு:
ஐயா!

உங்கள் கிராமச்சங்கம் கீரிமலைக் காவற்காரனது வேதனத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தலாலும், வேறு காரணங்களாலுங் கீரிமலை சம்பந்தமான விஷயங்களில் அக்கறையுடையதாயிருத்தலாலும், கீரிமலை விஷயமான விதிகள் எங்கள் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு, ஏசண்டரது ஆமோதிப்பையும் பெறுமாறு அவரிடம் அனுப்பப்படுமுன் உங்கள் சங்கத்தின் சூழ்ச்சிகளையும் குறிப்புரைகளையும் அறியுமாறு கீரிமலை விஷயமாகச் சட்டமாக்க உத்தேசித்திருக்கும் விதிகளின் பிரதியொன்றை இத்துடன் அனுப்புகிறேன்.

கீரிமலைத் தீர்த்தங்களைச் சனங்களுக்கு உபயோகமுள்ளனவாகவும், தற்கால சுகாதார விதிகட் கமைவாகவும் நன்னிலையில் வைத்திருக்க யாதுசெய்யவேண்டுமென்பதை யறியும் நோக்கத்தோடு, மேற்குறித்த விதிகளின் எல்லைக் குட்படாத விஷயங்களைக்குறித்த வினாப்பத்திரமொன்றையும் இத்துடன் அனுப்புகிறேன்.

தினசரி அல்லது வாராந்தங்களில் கீரிமலைக்குச் செல்வோர் தொகை அதிகரித்திருப்பினும் அதற்கேற்பக் கீரிமலையில் செய்யவேண்டியிருக்கும் நூற்றுக்கணக்கான திருத்தங்களைச் செய்யவும், அத்தாபனத்தை நடத்தவும் வேண்டிய பணவுதவி செய்வதிற் சனங்கள் ஆர்வமும் ஆதரவு முடையராகக் காணப்படவில்லையென்றே கூறவேண்டியிருக்கிறது.

இத்தகைய தாபனம் காரியக்கிரமமுடையதாய் முன்னேற்றமடையவேண்டில், அது பணவாட்சியுடைய ஒரு கிராமச்சங்கத்தால் அல்லது சில கிராமச்சங்கங்களாற் றரப்படும் பணத்தையாவது, (எப்பொழுதும் ஒருபடித்தாயன்றித்) தாம் விரும்பியபொழுது ஒவ்வொருவர் கொடுக்கும் உபகாரப்பணத்தையாவது, அகஸ்மாத்தாய் அரசினர் பொதுநிதியிலிருந்து உவேலாபித்துக் கொடுக்கப்படும் உதவிப்பணத்தையாவது எதிர்பார்த்தலாகாதென்பது சொல்லவேண்டியதில்லை.

ஆகலால் விதிகளையும் வினாப்பத்திரத்தையுங் கூடிய சீக்கிரத்தில் உங்கள் கிராமச்சங்கத்தின் அங்கத்தவர்களுடன் யோசித்து வினாக்களுக்கு விடைகளையும் விதிகளைப்பற்றிய குறிப்புகளையும் ஆவணி 4-ந் திகதிக்குமுன் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறேன். ஆவணிமாதம் 4-ந் திகதி விஷயங்கள் விவாதிக்கப்பட்டு இச்சங்கத்தால் அங்கீகரிக்கப்படும்.

வ. குமாரஸ்வாமி,
கிராமச்சங்கத்தலைவர்.

வினாக்கள்:

II. பொதுவாகப் பொதுச் சனங்களுக்குஞ் சிறப்பாக யாழ்ப்பாணத்து நாட்டாண்மைச் சபைகளுக்கும் விஞ்ஞாபனம்.

1. "கீரிமலைத் தருமநிதி" என்னும் பெயருடன் (கீரிமலைத் தீர்த்தங்கள் சம்பந்தமான திருத்தங்கள் செய்ய) யாழ்ப்பாணக் கச்சேரியிலே நிலையாக ஒரு நிதி சேமித்து வைப்பதற்கு வழிகளென்ன?
2. யாழ்ப்பாணத்து நாட்டாண்மைச் சபைகள் எல்லாம் அத்தகையநிதி சேர்க்குமுயற்சியிற் பங்குபற்றினால், அத்தகைய சபைகள் யாவும் பொதுச் சனங்களும் அந்நிதியின் பரிபாலனத்திலும் விநியோகத்திலும் பங்குபற்ற வழி யாது?
3. தீர்த்தங்களை நன்னிலையில் வைத்திருப்பதற்கு அவசியமான சாதாரண சில்லறைச் செலவுகளின் பொருட்டுப் பெண்கள் கேணியை உபயோகிப்பவர்களிடம் சொற்ப பணம் அறவிடுவது புத்தியாகுமா? அல்லது விரும்பியவர்கள் பணமிடுதற்கு உண்டியற் பெட்டிகள் இரு கேணிக்கரைகளிலும் வைப்பதா? மேற்கூறிய இரு வழிகளும் உசிதமன்றெனின் வருஷவாரிச் செலவுகளுக்குப் பணவருவாய் செய்வது எங்ஙனம்?
4. கீரிமலையில் தினந்தோறும் செல்லும் பலவகை வண்டிகள் நிற்க ஒருசாலை அவசியமா? சாலை அமைப்பதாயின் ஆடி அமாவாசையிலும் மற்றும் விசேஷ தீர்த்ததினங்களிலும் வரும் பெருந்தொகையான வண்டிகளை எங்கே நிறுத்தலாம்?
5. தீர்த்தக்கேணிகளுக்கும் கீரிமலைத் தருமமடங்களுக்கும் க்ஷயரோகிகள் செல்வதைத் தடுப்பதெப்படி? தொற்றுநோயுடையரென அறியப்படாதவரும் சந்தேகிக்கப்படாதவரும் தீர்த்தக்கேணிகளில் முழுகுவதால் தீர்த்தங்கள் தொற்றுநோய்க் கிருமிகளாற் பீடிக்கப்படுவதைத் தடுப்ப தெப்படி?
6. தெருவுக்கு வடக்கேயுள்ள இடத்தில் ஊற்றுநீரை அசுத்தமாக்காமல் மலகூடம் அமைக்க முடியுமா? தெருவுக்குத் தெற்கேதான் அவற்றை அமைக்கவேண்டுமாயின் எப்படி, எவ்விடங்களில் அவைகளை அமைக்கவேண்டும்?
7. பெண்கள்கேணிக்கு ஓர்பெண்காவலாளியை நியமித்தல் அவசியமா? ஆயின் அதற்கேற்பக் கிராமச்சங்கங்கள் அளிக்கும் பணத்தொகையை அதிகரிக்க முடியுமா?
8. கீரிமலையில் கஞ்சா முதலிய வெறிப்பதார்த்தங்கள் விற்பதைத் தடுப்பதெப்படி?
9. மேற்கூறியவை யொழிய, கீரிமலையில் அவசியம் கவனிப்புக்குரிய விஷயங்கள் எவை?

III. கீரிமலைத் தீர்த்தக் கேணிகளிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கவனிக்கவேண்டிய விதிகள்.

1. வடக்கே கடலையும் கிழக்கே அந்தியேட்டி மண்டபத்தையும் தெற்கே (கேணிக் கருகிலுள்ள) தர்மமடம், பிள்ளையார் கோவில் சுவாமி மண்டபங்கள் என்னு மிவற்றையும் மேற்கே கேணியையும் எல்லையாகவுள்ள வெளியிடம், கடலிலும் கேணியிலும் தீர்த்தமாடுபவர்களும் கடற்கரையிற் கிரியை செய்பவர்களும் முட்டின்றி வசதியாக உபயோகித்தற்கென வரையறுக்கப்பட்டது. அவ்வெளியின் எந்தப் பாகமாவது எப்பொழுதாவது வண்டிகள் மாடுகள் குதிரைகள் முதலியன தங்குவதற்கு உபயோகிக்கப்படலாகாது.
2. கேணிகளையுஞ் சுற்றுப்புறங்களையும் 1-ம் விதியிற் கூறப்பட்ட வெளியையும் அதிக சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பதும் அவ்விடங்களில் கிராமச்சங்க விதிப்பிரிவு 97. (1) (4) (5) (8) (9) (11) (13) 15-ல் அநுசிதமெனக் குறிக்கப்பட்ட காரியங்களை எவரும் செய்வதைத் தங்களால் இயன்றவரை தடுத்தலும், அத்தகைய அநுசிதச் செயல்களைக் கீரிமலை விதானைக்கு அறிவித்தலும் கிராமச்சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட கேணிக் காவலாளர் கடமைகளாம்.
3. சாதாரண நாட்களில் மனிதர் ஏறும் இறங்கும் வசதிக்காகவும் பொருட்களை ஏற்றவும் இறக்கவும் மாத்திரம் வண்டிகள் கடற்கரை வரையும் செல்லலாம். ஆனால் ஆடியமாவாசை முதலிய விசேஷ தீர்த்த தினங்களில் எக்காரணம்பற்றியும் எந்த வண்டியாவது மாவிட்டபுரம்—கீரிமலைத் தெருவின் கற்போட்ட அந்தத்துக்கப்பாற் செல்லக்கூடாது.
4. சாதாரண நாட்களில் விசுவநாதர் கோயிலின் முன்னுள்ள முக்கோணப் பரப்பிலும் அப்பரப்புக் கெதிருள்ள தெருக் கரைகளிலும் வண்டிகள், மாடுகள், குதிரைகள் முதலியவற்றை நிறுத்தலாம். ஆனால் ஆடி அமவாசைகளிலும், மற்றும் விசேஷ தினங்களிலும் மாவிட்டபுரம் கீரிமலைத்தெருவிலே வண்டிகள் அந்தத் தெரு காங்கேசன்துறை புன்னாலைத் தெருவைச் சந்திக்குமிடத்துக்கப்பாற் செல்லலாகாது. விசுவநாதர் கோவிலின் முன்னுள்ள இடத்தின் எந்தப்பாகமாவது அத்தகைய திருவிழாக்காலங்களில் வண்டிகள், மாடுகள் குதிரைகள் முதலியவற்றை நிறுத்துமிடமாக உபயோகிக்கப்படலாகாது.
5. க்ஷயரோகிகளும், மற்றும் தொற்று நோயாளர்களும் கீரிமலையிலுள்ள தர்மமடங்களிலாவது கிராமச் சங்கக் காவலாளரது காவலிலுள்ள கேணிகளிலாவது இடம்பெறலாகாது. இவ்விதியை மடத்தர்ம பரிபாலகரும், கிராமச் சங்கக் காவலாளிகளும் கண்டிப்பாய் அநுசரிப்பது அவர்கள் கடமையாம்.
6. மடங்கள், மற்றும் போசனசாலைகள், தேநீர்க் கடைகள், காப்பிக் கடைகள் முதலிய பொதுசனப் போசனசாலைகள் விஷயத்தில் கிராமச்சங்க விதிகள் 16—20 கண்டிப்பாக வற்புறுத்திச் செலுத்தப்படும்.
7. கீரிமலையிலுள்ள தீர்த்தங்கள், மடங்கள், கோவில்கள் ஆகிய விடங்களிலும் அவற்றின் சுற்றுப்புறங்களிலும் ஒட்டிப் பதுங்கியிருப்பவர்கள், அவ்விடங்களில் மரியாதைத் தாழ்வானவும் அருவருப்பைத் தரத்தக்கனவும் அசப்பியமுமான வார்த்தைகளை உபயோகிப்பவர்கள், மதுவெறியால் மதிமயங்கி ஒழுங்கீனமாக நடப்பவர்கள் ஆகிய இவர்கள் விஷயத்திற் கிராமச்சங்க விதிகள் 63—65 கண்டிப்பாய்ச் செலுத்தப்படும்.
8. கேணி இரண்டில் எதிலாவது துணிதோய்த்தலும், சீயாக்காய் சவுக்காரம் என்னுமிவை போன்ற பொருட்கள் இவைகளை அக்கேணிகளில் முழுகும்போது உடம்பில் அல்லது தலையில் உள்ள அழுக்கை நீக்க உபயோகித்தலும் வெளியேநின்று அவற்றைத்தேய்த்துக் கழுவுமுன் கேணியிலிறங்குதலும், சளி எச்சில் முதலியவற்றால் தண்ணீரை அசுத்தப்படுத்தலும், மனிதர் முழுகவென வரையறுக்கப் பட்ட விடங்களில் மிருகங்களை முழுக்காட்டுதலும், வண்டிகளைக் கழுவுதலும் கிராமச் சங்கவிதிகளின்படி தண்டனைக்குரிய அநுசிதச் செயல்களாம்.
9. கீரிமலையில் சங்கீதக் கச்சேரிகள், கூத்துக்கள், ஆட்டங்கள் முதலிய பொதுச்சன விநோதக் கொண்டாட்டங்கள் கிராமச் சங்கத்தலைவரிடம் அநுமதி (லைசென்ஸ்) பெற்றன்றி நடைபெறலாகாது.
10. மேற்கண்ட விதிகளை வற்புறுத்திநடத்தலும், அவற்றிற்கெதிராய செய்கைகளைக் கிராமச் சங்கத்தலைவர்க்கறிவித்தலும் குற்றஞ் செய்வோர்மேல் வழக்குத் தொடர்தலும் கீரிமலை விதானையின் கடமைகளாம்.
11. மேற் கூறிய விதிகள் செவ்வையாக நடைபெறும் பொருட்டும், குற்றவாளிகள் மேல் வழக்குத் தொடர்ந்து வழக்கை நடத்தும் பொருட்டுக் கீரிமலை விதானை கீரிமலையில் தான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை விட்டுத் தெல்லிப்பழைக்குச் செல்லவேண்டியிருப்பின், அதனாலேற்படக் கூடிய வசதிக் குறைவை நீக்கவும், கிராமச் சங்கத்தலைவர் அவசியமெனக் காணின் கிராமச் சங்க அங்கத்தவர்களில் மூன்று பேருக்குக் குறையாத தொகையினரைக் கீரிமலைக்கு அழைத்துக் கோடு கூடும் நேரம் இடம் முதலியவற்றை யார் யாருக்கு அறிவிக்கவேண்டுமோ அவர்க்கெல்லாம் அறிவித்தபின் மேற் கூறிய விதிகளை மீறினமை காரணமாக எழுந்த வழக்குகளைத் தீர்க்கக் கீரிமலையிற் கிராமச் சங்கம் கூட்டுவார்.

வ. குமாரஸ்வாமி
தெல்லிப்பழைக் கிராமச்சங்கத்
தலைவர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மென்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai.